# வரலாற்றுப் பின்னணியில் இலக்கணம் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் New approaches to teaching Grammar in the background of Historical context

**முனைவர் பா. சங்கரேஸ்வரி | Dr.B.Sankareswari**

உதவிப்பேராசிரியர், தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625021, தமிழ்நாடு, இந்தியா. sankaritamil@gmail.com, Orcid No: https://orcid.org/0000-0002-5389-4533

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கணம் மாணவர்களுக்குப் பல்வேறு நிலைகளில் கற்பிக்கப்படுகிறது. உயர்நிலைப்பள்ளி, மேனிலைப்பள்ளி, இளநிலை, முதுநிலை.... என பல நிலைகளில் கற்பிக்கப்படுகிறது. அந்தவகையில் முதுகலைத்தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு இலக்கணத்தை வரலாற்றுப் பின்னணியிலும் கோட்பாடு அடிப்படையிலும் கற்பித்தல் எங்ஙனம் என்னும் அடிப்படையில் இக்கட்டுரை அமைகின்றது.

**Abstract**

Tamil grammar is taught to students at different levels. High school, high school, undergraduate, postgraduate. As is taught in many stages.

Thus this article is based on how to teach grammar to students studying postgraduate Tamil in historical context and in theory.

**திறவுச்சொற்கள் (Keywords):** இலக்கணம், கோட்பாடுகள், வரலாற்றுப் பின்னணி, கற்பிக்கும் முறை, புரிதல்கள், அணுகுமுறைகள், Grammar, Theories, Historic Background, Method of Teaching, Understandings, Approach.

## பின்னணி

முதுகலைத் தமிழ் மாணவர்கள் இதுவரை இலக்கணங்களில் கூறப்பட்ட செய்திகளை மனப்பாடம் செய்து தேர்வு எழுதுகின்றனர். அதைத் தாண்டிய ஒரு சிந்தனை என்பது அவர்களுக்கு இல்லை. எனவே ஒவ்வொரு இலக்கணத்திற்கும் தோற்றம் யாது? எந்த இலக்கியத்திற்கு இந்த இலக்கணம் தோன்றியது என்பதைக் கோட்பாட்டு அடிப்படையில் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

## சிக்கலைக் கண்டறிந்த விதம்

நான் முதுகலை மாணவர்களுக்குக் கடந்த எட்டு ஆண்டுகளாக வகுப்பு எடுத்து வருகின்றேன். அவர்கள் அதிக அளவில் மதிப்பெண் பெற வேண்டும் என்ற நோக்கத்திலே செயல்படுகின்றனரே தவிர புதிதாக ஒரு செய்தியைத் தெரிந்து கொள்வோம் என்ற எண்ணம் இல்லை. இதை அறிந்து மாணவர்களுக்கு விருப்பப்பாடமாக இலக்கணவியல் என்ற பாடத்தை அறிமுகப்படுத்தலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது.

- ❖ கோட்பாடு யாது? கொள்கை யாது?
- ❖ இலக்கியத்தின் வழியாக இலக்கணத்தைக் கற்றுத் தரலாமா?
- ❖ ஓர் இலக்கணத்திற்கும் மற்றோர் இலக்கணத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமை யாது?
- ❖ காலச் சூழல்தான் இலக்கணத்தைக் கட்டமைக்கிறதா?

இவையெல்லாவற்றிற்கும் தீர்வாக மாணவர்களுக்கு வரலாற்றுப் பின்னணியில் இலக்கணத்தைக் கற்றுத்தர வேண்டும் என்று ஆய்வை மேற்கொள்ள முற்பட்டேன்.

ஒரு மொழியில் எழுதப்படும் இலக்கண நூல் அம்மொழியை மட்டும் அடிப்படையாக வைத்துப் படைக்கப் பெறுவதில்லை. அவ்விலக்கணநூல் எழுதப்பெற்ற கால அரசியல், சமூகச் சூழல் ஆகியவற்றோடும் தொடர்புடையதாகும். தமிழ்மொழி ஒன்றுதான். அதற்கு இத்தனை இலக்கணங்கள் உருவாக்கத்திற்கான தேவை யாது? ஏனெனில் ஒவ்வோர் இலக்கணமும் அக்காலகட்ட வழக்குமொழியை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. ஒரு மொழியின் மீது மற்றொரு மொழியின் கலப்போ, தாக்கமோ ஆதிக்கமோ மிகச் சாதாரணமாக நிகழ்ந்துவிட முடியாது. அரசியல் நிர்வாகத்திலும், கல்வி முறையிலும், செல்வாக்குப் பெற்று விளங்கும் ஒரு மொழியின் இலக்கிய இலக்கண மரபு மற்றொரு மொழியின் இலக்கிய இலக்கண அமைப்பிற்கு மாதிரியாக விளங்கும். எனவே தொல்காப்பியர் காலந்தொட்டு 20ஆம் நூற்றாண்டு வரை தமிழ்மொழியில் நடைபெற்ற மாற்றத்திற்குக் காரணம் யாது? சமூக அரசியல் தளங்களில் செல்வாக்குப்பெற்று எம்மொழி திகழ்ந்து விளங்கியது? செல்வாக்கின் காரணமாக இலக்கணம் உருவாக்கத்தில் ஏற்படுத்திய புதிய மாற்றம் யாது? போன்ற சமூகப் பின்புலங்களை மாணவர்கள் அறியும் நோக்குடன் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

## ஆய்வின் நோக்கம்

- ❖ மாணவர்களின் ஆராய்ச்சித்திறனைத் தூண்டுதல்
- ❖ அந்தந்தக் காலகட்ட வரலாற்று நிகழ்வுகளினால் ஏற்பட்ட மொழி மாற்றம் குறித்துச் சிந்திக்க வைத்தல்
- ❖ ஆய்வு வினாக்கள்
- ❖ இலக்கியத்தின் வழி இலக்கணத்தைக் கற்பிப்பது எவ்வாறு?
- ❖ அதன் மூலம் ஒற்றுமை வேற்றுமைகளைக் காண இயலுமா?
- ❖ இதன் மூலம் கோட்பாடு ரீதியில் மாணவர்கள் இலக்கணங்களைப் புரிந்து கொள்வரா?
- ❖ வரலாற்றுப் பின்னணி மூலம் கற்பிப்பதால் மாணவரின் ஆராயுந்திறன் வளரும் என்பதில் எந்த அளவிற்கு உண்மை உள்ளது?

## ஆய்வின் எல்லை

மதுரை காமராசர் பல்கலைக்கழக முதுகலை இரண்டாம் ஆண்டு பயிலும் 9 மாணவர்களை வைத்துக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## தொடர்புநூல் பற்றிய திறனாய்வு

இலக்கிய இலக்கண நூல்கள் தேர்வு அடிப்படையில் மட்டும் வாசிக்கப்படாமல் புதிய அணுகுமுறை மூலம் ஆராயுந்திறனை மேம்படுத்த முடியும் என்பதை வலியுறுத்தியுள்ளன.

ஒரு குறிப்பிட்ட இலக்கணநூல் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டு அவ்விலக்கணத் தோற்றத்திற்கான சமூகப் பின்புலம் யாது? என்பதை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்து அதைப்போலவே பிற இலக்கணங்களின் தோற்றத்தினையும் கண்டறியச் செய்வது ஆய்வின் முக்கிய நோக்கமாகும். எனது நோக்கம் நிறைவேறும் பொருட்டு மாணவர்களுக்குப் பல வகையான இலக்கண மரபுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன்வழி புதிய அணுகுமுறையிலான இலக்கணங்கள் யாது என்பதை மாணவர்கள் உய்த்துணர்வார்கள்.

## நெறிமுறை

இவ்வாய்வு பத்து வாரங்களுக்கு மேற்கொள்ளப்பட்டது. முதல் வாரத்தில் மாணவர்களுக்கு முன்னிலைத் தேர்வு கொடுக்கப்பட்டது. முன்னிலைத் தேர்வில் மாணவர்கள் இலக்கணத்தைப் புரிந்துகொண்ட விதத்தை அறிய முடிந்தது. அதன்பிறகு புதிய அணுகுமுறை செயல்படுத்தப்பட்டது. அதன்பிறகு முன்னிலைத் தேர்விற்கு இணையான வகையில் பின்னணித்தேர்வு ஒன்று கொடுக்கப்பட்டு மாணவர்கள் கோட்பாட்டு அடிப்படையில் இலக்கணங்களை எங்ஙனம் புரிந்து கொண்டுள்ளனர் போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

ஆய்வு பின்வரும் முறையில் நடைபெற்றது.

- ❖ முன்னிலைத் தேர்வு
- ❖ நடவடிக்கைகள்
- ❖ பின்னிலைத் தேர்வு

## ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில் பயின்று வரும் முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் ஆவர். இதில் 4 பெண்களும் 5 ஆண்களும் கலந்து கொண்டனர். இவர்களின் சராசரி வயது 22.

## ஆய்வுக் கருவிகள்

முன்னிலைத் தேர்வுக்கு, ஆய்வு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட எட்டுப் பயிற்சித் தாள்களும் முன்னிலைத் தேர்வுக்கு இணையான பின்னிலைத் தேர்வுப் பயிற்சித் தாளுமே இவ்வாய்வின் ஆய்வுக் கருவிகளாகும்.

## செய்முறை

2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முன்னிலைத் தேர்வு நடத்தப்பட்டது. பின்னிலைத் தேர்வு மார்ச்சு மாதத்தில் நடத்தப்பட்டது.

இலக்கணம் பற்றியதான செய்திகளைக் கற்றுக்கொள்ளும் பயிற்சியாக முன்னிலைத் தேர்வு அமைந்தது.

இலக்கணங்களைக் கோட்பாட்டு அடிப்படையில் வரலாற்றுப் பின்புலத்தோடு கற்பிப்பதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். அதனால் வகுப்பில் புதிய அணுகுமுறையைச் செயல்படுத்துவதில் நான் மிகுந்த கவனம் செலுத்தினேன். புதிய அணுகுமுறைகள் எட்டு வாரப் பயிற்சியின்போது வகுப்பறையில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**வாரம் - 1**

இலக்கணம் என்பது யாது? என்று முதல் வகுப்பில் கேட்கப்பட்டது. இலக்கணம் என்பதன் வேர்ச்சொல் யாது?

இலக்கணம் என்னும் சொல் வடமொழிச் சொல்- வையாபுரிப்பிள்ளை, பாவாணர்,

வெள்ளைவாரணர் - தமிழ்ச்சொல்

இலக்கணம் என்பது கலைச்சொல் - செ.வை.சண்முகம்

தொல்காப்பியர் காலத்தில் இலக்கணம் என்கிற சொல் 4 இடங்களில் பயின்று வந்துள்ளது. முந்துநூல் கண்டு என்னும் பாயிரச் சொற்கள் முந்தைய இலக்கணங்களைக் குறித்தவை. எனவே நூல் என்கிற சொல்லும் இலக்கணத்தையே குறித்தது. மொழியியல் அறிஞர்கள் Grammar is a Book என்று வழங்குகின்றனர். இவ்வாறாக முதல் வாரத்தில் கலந்துரையாடப்பட்டன.

**வாரம் - 2**

இலக்கணம் என்ற சொல்லுக்கு விளக்கம் கொடுத்ததைத் தொடர்ந்து, கொள்கை என்பது யாது? கோட்பாடு என்பது யாது? என்பனவற்றிற்கு விளக்கம் கொடுக்கப்பட்டது.

**வாரம் - 3**

மரபுவாரியாக இலக்கணங்களை எப்படிப் பார்க்கலாம் என அட்டவணையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**வாரம் - 4**

இலக்கணம் உருவாக்கம் என்பது யாது? என்றும் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்பதற்கும் விளக்கம் கொடுக்கப்பட்டது.

**வாரம் - 5**

ஐந்திலக்கண மரபு, மூன்றிலக்கண மரபு, ஈரிலக்கண மரபு, ஓரிலக்கண மரபு, அறுவகை இலக்கணம் என இலக்கணங்களைப் பாகுபடுத்தப்பட்டது.

**வாரம் - 6**

ஐந்திலக்கண மரபில் இடம்பெறும் தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல், நேமிநாதம், முத்துவீரியம், இலக்கண விளக்கம், இலக்கணத் தொகை போன்ற நூல்கள் அனைத்தும் கோட்பாட்டு ரீதியில் கற்பிக்கப்பட்டன. ஒவ்வொரு இலக்கணத்தின் நோக்கமும் வெவ்வேறானவை என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் அறிமுகப்படுத்தப்பட்டன.

**வாரம் - 7**

மூன்றிலக்கண மரபை அறிமுகம் செய்து ஐந்திலக்கண மரபு எவ்வாறு மூன்றிலக்கண மரபாக மாறுவதற்குரிய காரணங்கள் விளக்கப்பட்டன.

**வாரம் - 8**

ஈரிலக்கணமரபு, ஓரிலக்கண மரபு அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்விலக்கணத் தோற்றத்திற்கான காரணங்கள் ஆராயப்பட்டன.

**வாரம் - 9**

அறுவகை இலக்கணம் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விலக்கணம் முழுக்கமுழுக்க சமயத்தைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளது என்பதை மாணவர்களின் மத்தியில் பதிய வைக்க முடிந்தது.

**வாரம் - 10**

இதுவரை கூறப்பட்ட மரபுகளைத் தொகுத்துத் தமிழ்மொழியில் இலக்கணங்கள் 63 என்று வகைப்படுத்தப்பட்டன.

**வாரம் - 11**

ஆய்வை நிறைவுசெய்யும் இறுதி வாரத்தில் முன்னிலைத் தேர்வுக்கு இணையான பின்னிலைத் தேர்வு ஒன்று தரப்பட்டது.

**பகுப்பாய்வு**

மாணவர்கள் செய்த முன்னிலைத் தேர்வு, பின்னிலைத் தேர்வு, 10 வார நடவடிக்கைகள் அவ்வப்போது தேர்வு வைத்துத் திருத்தப்பட்டன. முன்னிலைத் தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களைச் சற்று ஆராய்வோம்.

**அட்டவணை – 1**

**முன்னிலைத் தேர்வின் முடிவுகள்**

| மாணவர் | பெற்ற மதிப்பெண்கள் (75) |
|---|---|
| 1 | 23 |
| 2 | 24 |
| 3 | 22 |
| 4 | 25 |
| 5 | 26 |
| 6 | 27 |
| 7 | 20 |
| 8 | 22 |
| 9 | 23 |

முன்னிலைத் தேர்வின் முடிவினைக் கண்ட நாம் 10 வாரங்களில் நடத்தப்பட்ட நடவடிக்கைகளை ஆராய்வோம். தொடக்கத்தில் மாணவர்கள் இலக்கணம் என்றவுடன்

தயங்கினார்கள். இலக்கணத்தில் புறவரலாற்றைத் தெரிந்து கொண்டு அகவரலாற்றிற்குச் செல்வோம் என்ற எண்ணத்தை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தினேன். மாணவர்களும் ஆர்வத்துடன் பயிலத் தொடங்கினார்கள்.

மரபு என்பது யாது? இலக்கணம் என்பது யாது? இலக்கண உருவாக்கத்திற்கான தேவை யாது? தமிழ்மொழி ஒன்றுதான். அதற்கு இத்தனை இலக்கணம் உருவாவதற்குக் காரணம் யாது? காலந்தோறும் மொழியானது மாறுதலுக்கு உட்படுமா? கோட்பாடு மாறுதலுக்கு உட்பட்டதா? வடமொழிச் சார்பு இலக்கணங்களின் நோக்கம் யாது? ஒவ்வோர் இலக்கணத்திற்கும் வரலாற்றுப் பின்னணி யாது? என அத்துணை வினாக்களுக்கும் மாணவர்கள் பதிலளிக்கக் கற்றுக் கொண்டனர். மேலும் ஒவ்வோர் இலக்கண மரபிலும் இடம்பெறும் இலக்கணங்கள் எத்தனை? சமயம் இலக்கணத்தில் பிரதிபலிக்குமா? போன்ற வினாக்களுக்கான விடைகளை மாணவர்கள் அறிந்து தெளிந்து கொண்டனர்.

## பின்னிலைத் தேர்வு முடிவுகள்

| மாணவர் | பெற்ற மதிப்பெணகள் (75) |
|---|---|
| 1 | 48 |
| 2 | 52 |
| 3 | 55 |
| 4 | 49 |
| 5 | 57 |
| 6 | 52 |
| 7 | 53 |
| 8 | 49 |
| 9 | 47 |

மாணவர்கள் செய்த முன்னிலை, பின்னிலைத் தேர்வுகளின் ஒப்பாய்வின் மூலம் 60 சதவீதம் துரித வளர்ச்சி அடைந்துள்ளனர். இதன் மூலம் இலக்கணத்தை எவ்வாறு பார்க்க வேண்டும் என்பதை மாணவர்கள் கற்றுக்கொண்டனர் என்பதை அறிய முடிந்தது.

## முடிவுகளும் பரிந்துரைகளும்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புல மாணவர்களுக்கு முன்னிலைத் தேர்வு கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பத்து வாரப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. அப்பயிற்சிகளை மாணவர்கள் சிறப்பாகச் செய்தனர். இறுதியாகப் பின்னிலைத் தேர்வு கொடுக்கப்பட்டது. முன்னிலை, பின்னிலைத் தேர்வினை ஒப்பிடும்போது மாணவர்களிடையே நல்ல முன்னேற்றம் தெரிந்தது. இலக்கணத்தைப் புதிய அணுகுமுறை, செயல்பாட்டுடன் பயில முற்பட்டனர். மேலும் இலக்கணத்தைப் பயிலும்போது கோட்பாடுகளை இலக்கியத்திற்கும் பொருத்திப் பார்த்தனர். இதனால்

வியக்கத்தக்க வேறுபாட்டை மாணவர்களிடத்தில் கண்டேன். மேலும் இலக்கண நூல்களைத் திறனாய்வு செய்யவும் மாணவர்கள் கற்றுக் கொண்டனர்.

## பரிந்துரைகள்

- இலக்கணம் என்பது இனிமையானது என்பதை ஆசிரியர்கள் மாணவர்களிடம் பதிய வைக்க வேண்டும்.
- ஒவ்வோர் இலக்கண ஆசிரியனுக்கும் இலக்கணம் எழுதுவதற்கு வலுவான காரணங்கள் உண்டு என்பதைத் தெளிவுறுத்த வேண்டும்.
- மரபு மாற்றத்திற்குக் காரணம் யாது? என்பதை மாணவர்களிடம் வினவ வேண்டும்.
- மொழிக்கலப்பு மொழியைப் பாதித்ததா? வளப்படுத்தியதா? என ஆராயச் செய்ய வேண்டும்.
- கோட்பாட்டு முறையில் இலக்கணங்களை அணுகுவதற்குக் கற்றுத் தரவேண்டும்.
- இலக்கியத்திற்கு இலக்கணம் என்றால் எந்த இலக்கியத்திற்கு எந்த இலக்கணம் எழுதப்பட்டது என்பதை ஒப்பிட்டுப் பார்க்கப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்.
- இலக்கணக் கோட்பாடுகளைக் கற்பித்தல் என்னும் இவ்வாய்வு மாணவர்களிடையே இலக்கணம் பற்றியதான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என நம்புகிறேன்.

## துணைநின்றவை


- கருணாநிதி மா., (2008), கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடு பதிப்பகம், கொழும்பு, இலங்கை.
- கார்த்திகேசு சிவத்தம்பி, (1993), தமிழ் கற்பித்தலில் உன்னதம், தர்ஷன் பிரசுரம் இலங்கை.
- சரவணமுத்து. இரா., (2006), கற்றல் கற்பித்தல், சாரதா பதிப்பகம், சென்னை.
- பாலசுப்பிரமணியம் தனபாலன், (2008), நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, இலங்கை.
- வசந்தி சு., (2007), கற்பித்தலில் புதிய அணுகுமுறை, வனிதா பதிப்பகம், சென்னை.


## Bibliography


- M.Karunanithi, (2008) Katral Karpithal Mempaatirkaana Vazhimuraigal, Chemmamadu Pathipagam, Columbu, Ilangai
- Karthikesu Sivathambi (1993), Tamil Karpithalil unatham Aasiriyar Pangu, Dharshana Pirasuram, Ilangai.
- R.Sarava Muthu (2006), katral karpithal, Saratha Pathipagam, Chennai.
- Balasubramaniyam Dhanabalan (2008), Naveena katral karpithal Muraiyiyalgal, Kumaran Puthaga Illam, Columbu, Ilangai.
- S. Vasanthi (2007), Karpithalil Puthiya Anugumurai, Vanitha Pathipagam, Chennai.


## இணைய ஆய்விதழ்கள்


- மா.தியாகராஜன், கற்றல் கற்பித்தல், சிங்கப்பூர் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், (http://www.muthukamalm.co/crray/serial/p4d.html)

- ச.சேவியர், கற்பிக்கும் முறையில் இலக்கண நூல்கள் கூறும் கருத்துக்கள், இலயோலா கலை அறிவியல் கல்லூரி, மெட்டாலா, நாமக்கல் மாவட்டம். (http://www.muthukamalm.co/crray/serial/p4d.html)
- க.பாலசுப்பிரமணியன், கற்றல் ஒரு ஆற்றல், (www.vallamai.com/p=78383)
- ப.பானுமதி, மொழிப்பாடம் கற்பித்தலில் (www.vallamai.com/p=10451)


******************

# A STUDY OF ICT FOR MARGINALIZED COMMUNITIES: A CRITICAL PERSPECTIVE IN NILGIRIS DISTRICT நீலகிரி மாவட்டத்தில் உள்ள விளிம்புநிலை மக்களின் மத்தியில் தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கத்தைப் பற்றிய ஆய்வு

**Dr. J.Jone Antony Raja | முனைவர் ஜோ.ஜோன் அந்தோணி ராஜா**

Department of Visual Communication, Hindusthan College of Arts and Science, Behind Nava India, Coimbatore – 651 028

**ஆய்வுச் சுருக்கம்**

அறிவு சமூகம் அல்லது தகவல் சமூகம் என்பது தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் (ஐசிடி) சாத்தியமான நன்மைகளை அங்கீகரிக்கும் மற்றும் தொழில்நுட்ப நிர்ணயத்தை வலியுறுத்தும் சொற்கள். உலகெங்கிலும் நடத்தப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் குறிப்பாக விளிம்புநிலை சமூகங்களுக்கு வளர்ச்சிக்கான தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளனர். இந்த தாள் விளிம்புநிலை சமுதாயத்திற்கு இந்த (ஐசிடி) என்ன அர்த்தம் மற்றும் அவர்களின் சமூக கட்டமைப்பில் ஐசிடியின் பொருத்தத்தை புரிந்து கொள்ள ஒரு முக்கியமான கண்ணோட்டத்தை ஏற்றுக்கொள்கிறது. இந்த ஆய்வு இயற்கையில் விளக்கமான மற்றும் ஆய்வுக்குரியது. பதிலளிப்பவர்களிடமிருந்து தகவல்களின் இலவச ஓட்டத்தை உறுதி செய்ய இந்த ஆய்வு அவசரகால நேர்காணல்களைப் பயன்படுத்துகிறது. நேர்காணல்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவை பகுப்பாய்வு செய்ய ஒரு தூண்டல் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. (ஐசிடி)மற்றும் ஓரங்கட்டப்பட்ட படிப்பில் அந்நியப்படுதல், உயிர்வாழ்தல் மற்றும் சேர்த்தல் போன்ற சமூக பிரச்சினைகளை கருத்தில் கொள்வதன் முக்கியத்துவத்தையும் இந்தக் கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

**Abstract**

"ICTs for development" (ICT4D), knowledge society or information society are the terms which endorse the potential benefits of Information and Communication Technologies (ICT) and emphasize technological determinism. Researchers conducted worldwide have highlighted the importance of ICT for development particularly for the marginalized communities. This paper adopts a critical perspective to understand what these ICT mean to marginalized society and the appropriateness of ICT in their social structure. This study is descriptive and exploratory in nature. The study employs emergent interviews to ensure free flow of information from the respondents. An inductive approach is used to analyze the data collected from the interviews.